**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**அசல் வழக்கு எண். 112/2026**

திரு.K.சம்பத்குமார் ..வாதி

..எதிர்..

1. திரு.V.ஆனந்த கிருஷ்ணன்,
2. திரு.வீர அப்துல்லா ..பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 14.08.2026 ம் தேதியன்று விசாரணைக்கு என் முன்னிலைக்கு கொண்டுவரப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.அஸ்வத்குமார், B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், இன்று வாதி அழைத்தும் ஆஜரில்லை எந்தவித முகாந்திரமும் இல்லை எனவே இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

அசல் வழக்கானது 1,2 பிரதிவாதிகளோ, அவரின் ஆட்களோஅல்லது அவரின் முகவர்களோ அல்லது அவரின் அதிகாரம் பெற்ற நபர்களோ அல்லது எந்தவொரு மூன்றாம் நபர்களோ தாவாச் சொத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட M/s.AKR Food Products – நிறுவனத்தின் இயந்திரங்களை

கையகப்படுத்தக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவும் மற்றும் தாவாச் சொத்தில் வாதியின் சுவாதீன அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்றும் நிரந்த உறுத்துக்கட்டளை உத்தரவும் மற்றும் தாவா செலவுத் தொகையினை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த உத்தரவிட வேண்டும் என அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Plaintiff counsel present and represented no instruction. Plaintiff called absent. Hence suit is dismissed for default for non appearance of Plaintiff, no cost.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.08.14 19:00:30 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.